சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO.50/2016

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.2 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திரு.முத்து அவர்களால் 44/1969 பிரிவின்படி 22.12.2021 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : கனகராஜ் | கிராமம் : |
| த/பெ : வெள்ளையன் | வட்டம் : |
| மதம் : | தொழில் : |
| ஜாதி : | வயது : |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த மனுவின் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை என்றால்சரிதான். மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் கழுகூர் கிராமம் மேலகம்பேஸ்வரத்தில் வசித்து வருகிறேன். சுப்ரமணியன் மகன் மணிகண்டன் என்பவர் தான் விபத்தில் இறந்துபோனார். அவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்தான். விபத்தில் இறந்துபோன மணிகண்டன் விபத்துசமயத்தில் இருச்சக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தார். நான் சென்ற இருச்சக்கர வாகனத்தின் எண் எனக்குதெரியாது. இருச்சக்கர வாகனத்தை மணிகண்டன் ஓட்டிச்சென்றார் நான் அவர் பின்னால் அமர்ந்துச்சென்றேன். அந்த இருச்சக்கர வாகனம் இறந்துபோன மணிகண்டனுக்கு சொந்தமானது. நான் கழுகூரில் இறங்கி எனது இருச்சக்கர வாகனத்தில் சென்றேன் மணிகண்டன் அவரது இருச்சக்கர வாகனத்தில் சென்றார். நான் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனத்தின் எண் எனக்குதெரியாது. மணிகன்டன் ஓட்டிச்சென்ற வாகனம் டிஎன்39 ஏஹச்5414 பஜாஜ் சீட்டி ஹன்டிரட் வாகனம் என்றால்சரிதான். டிஎன்47x 5361 என்ற எண்ணுள்ள TVS Jive வாகனத்தை ரமேஷ் என்பவர் ஓட்ட சரவணன் என்பவர் பின்னால் அமர்ந்து வந்தார் என்றால் அவர்கள் விபத்து நடந்த பின்பு விபத்து இடத்திற்கு வந்தார்கள். அரசுப்பேருந்து குளித்தலை மணப்பாறை தென்வடல் சாலையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தது. ரமேஷ் ஓட்டிச்சென்ற இருச்சக்கர வாகனம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி

சென்றுக்கொண்டிருந்தது. விபத்து காலையில் 10.30 முதல் 11 மணிக்குள் நடந்தது. அப்போது மழை பெய்துக்கொண்டிருந்தது. மணிகண்டன் எனது இருச்சக்கர வாகனத்தை முந்திச் சென்றார் என்றால் சரியல்ல அவர் முன்னால் சென்றுக்கொண்டிருந்தார் நான் அவருக்கு பின்னால் எனது வண்டியில் சென்றுக்கொண்டிருந்தேன். ரமேஷ் ஓட்டிவந்த இருச்சக்கர வாகனமும் மணிகண்டன் ஓட்டிவந்த இருச்சக்கர வாகனமும் மோதிக்கொண்டதா என்றால்இல்லை. ரமேஷுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை எனக்கு நன்றாக தெரியும். மணிகண்டன் பேருந்தை முந்திச்சென்று ரமேஷ் வந்த இருச்சக்கர வாகனத்தில் மோதி கீழே விழுந்துவிபத்து ஏற்பட்டது என்றால்சரியல்ல. அப்போது மழைப் பெய்துக்கொண்டிருந்ததால் கீழே விழுந்த மணிகண்டன் வழுக்கிச்சென்று பேருந்தில் மோதி விட்டார் என்றால் சரியல்ல. போலீஸார் என்னை விசாரித்தார்கள். போலீஸார் சம்பவஇடத்திற்கு வந்து எப்படி விபத்து நடந்தது என்று விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால்சரிதான். எனக்கு இருச்சக்கர வாகனம் ஒட்ட ஓட்டுநர் உரிமம் இல்லை. மணிகண்டனுக்கு விபத்தின் போது சுமார் 15 வயதிருக்கும். மணிகண்டனுக்கு இருச்சக்கர வாகனம் ஓட்ட உரிமம் கிடையாது. நான் விபத்தை நேரில் பார்த்தாக சொல்வது முற்றிலும் தவறானது. விபத்திற்கு முதல்காரணம் மணிகண்டன் தான் என போலீஸார் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால்சரியல்ல. இரண்டு மோட்டார் மோதிக்குகொண்ட விபத்தில் இழப்பீடு பெறுவதற்காக அரசுப்பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்றேன் என்றால்சரியல்ல.

ஒம்/கனகராஜ்

ஒம்/M.சண்முககனி,

சார்பு நீதிபதி,

குளித்தலை.